Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | : ASSISTANT SESSIONS JUDGE, KULITHALAI |
| Calendar<br>Miscellaneous<br>Sessions | : Case No.S.C.55/2019 |
| Deposition of Witness for | : Prosecution அ.சா.1<br>Defense<br>Court |
| Name | :பெரியசாமி |
| Father's Name | :நாராயணன் |
| Village | :மேலப்பட்டி |
| Taluk | :குளித்தலை |
| Caste | :B.C. |
| Calling | :டாஸ்மாக் சேல்ஸ்மேன் |
| Religion | :இந்து |
| Age | :41 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.03.2020 .

மு.வி.

நான் மேலப்பட்டியில் வசித்து வருகிறேன். நெய்தலூர் காலனி டாஸ்மாக் கடையில் விற்பனையாளராக பணிபுரிந்து வருகிறேன். 11.11.2018 ம் தேதி கடையில் வேலை முடித்துவிட்டு இரவு 11.00 மணிக்கு எனக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் கடைக்கு சேர்ந்த விற்பனை பணம் ரூ.2,50,200/- மற்றும் அக்கவுண்ட்ஸ் தினசரி விற்பனை ரசீதையும் எடுத்துக்கொண்டு என்னுடைய வீட்டிற்கு சென்றுக்கொண்டிருந்தேன். அப்பொழுது பனையூரிலிருந்து செல்லும் பெருகமணி ரோட்டில் காளியம்மன் கோவில் அருகே சரவணன் தோட்டம் பக்கத்தில் சென்றுக்கொண்டிருந்தபோது அப்பொழுது 2 இருசக்கர வாகனங்களில் 4 பேர் வந்து என்னுடைய இருசக்கர வாகனத்தை மறித்தார்கள். அப்பொழுது அந்த வண்டியில் வந்த ஒருவர் அரிவாளை காண்பித்து வெட்ட வந்தார். நான் வேண்டாம், வேண்டாம் என்று கூறியபோது மிளகாய்பொடியை முகத்தில் அடித்துவிட்டார்கள்

அப்பொழுது நான் கண்ணை தேய்த்துக்கொண்டு வண்டியிலிருந்து கீழே விழுந்துவிட்டேன். அப்பொழுது நான் பணம் கொண்டு வந்த சாரதாஸ் கட்டைபையை எடுத்துச்சென்றுவிட்டார்கள். நான் கண்ணை தேய்த்துக்கொண்டு இருந்தபோது சிறிது நேரம் கழித்து பார்த்தபோது அவர்கள் எங்கு சென்றார் என்று தெரியவில்லை. என்னுடைய வண்டி சாவியையும் எடுத்துச்சென்றுவிட்டார்கள். பிறகு சூப்பர்ரைசர் கண்ணன் என்பவருக்கு தகவல் சொல்லி டாஸ்மாக் மேலாளராக தகவல் சொன்னார். பிறகு மறுநாள் காலை 09.00 மணியளவில் குளித்தலை காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். நான் அன்று பார்த்த 4 நபர்களை அடையாளம் காட்ட முடியுமா என்றால் அடையாளம் காட்ட முடியாது. தற்பொழுது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் அது நான் கொடுத்த புகார் தான். அது அ.சா.ஆ.1. அரிவாளை பார்த்தால் அடையாளம் காட்ட முடியுமா என்றால் முடியும் நீதிமன்றத்தில் உள்ள அரிவாள் போல் தான் இருந்தது அது சா.பொ.1. இதுசம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

1 முதல் 5 எதிரி தரப்பில் கு.வி.

சம்பவத்தன்று சூப்பர்வைசர் 8.30 மணிக்கு சென்றுவிட்டார். 10 மணிக்கு தான் அலுவலக நேரம் முடியும் என்றால் சரிதான். 10 மணிக்கு பிறகு சரக்கு இருப்பு நிலை சரிபார்க்கவேண்டும். அன்றையதினம் விற்பனை தொகைகளை என்னுடைய கணக்கு வழக்குகளை பார்த்தால் தெரியவரும் என்றால் சரிதான். காணாமல் போன பணத்தை 16.11.2018ம் தேதி கட்டி விட்டேன். எதிரிகளை பிடித்துவிட்டார் என்ற விவரம் சம்பவம் நடந்து 9ம் நாள் தெரிந்தது. காவல்நிலையத்தில் சொன்னார்கள். சம்பவம் நடந்து 12 மணி நேரம் கழித்து தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். ஆனால் முதலில் தகவல் சொன்னேன். நான் புகார் கொடுப்பதற்கு முன்பே ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வந்து விட்டார் என்றால் சரிதான். மிளகாய்பொடியை தூவியதற்காக சிகிச்சை பெற்று வந்தேன். வண்டியை வீட்டிலிருந்த வேறு சாவியை வைத்து எடுத்துக்கொண்டேன். சாவியை எதிரிகள் எடுத்துச்செல்லவில்லை என்றும், நான் பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் உள்ள அரிவாள் மாதிரி தான் இருந்தது என்றும் ஆனால் இந்த அரிவாள் என்று கூறமுடியாது என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றும் நான் பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

6 வது எதிரி தரப்பில் கு.வி.

போலீசார் விசாரித்தபோது அம்மாவாசை இருட்டாக இருந்தது வண்டியில் வெளிச்சம் இல்லாததால் 4 பேர் யார் என்று தெரியவில்லை என்று சொன்னேன் என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொல்லியதுபோல் தான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன். போலீசார் வழக்கிற்கு ஏற்றாற்போல் எழுதினார்களா என்றால் நான் கூறியதை தான் எழுதினார்கள். நான் சொன்ன விதத்தில் போலீசார் எழுதியதில் தான் நான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். காணாமல் போன தொகையை

எத்தனை ரூபாய் நோட்டுக்கள் என்று கூளியுள்ளேனா என்றால் சரிதான். நீதிமன்றத்தில் உள்ள அரிவாள் தான் குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான். இதுபோல் தான் இருந்தது. முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7, 8 எதிரிகள் தரப்பில் கு.வி.

நான் கொடுத்ததாக சொல்லப்படும் புகாரில் எதிரிகளின் உருவ அமைப்பு பற்றியோ, வயது குறித்தோ, அங்க அடையாளங்கள் குறித்தோ எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் கொடுத்ததாக சொல்லும் புகாரில் முதலில் மிளகாய்பொடியைதூவியதாகவும் பின்பு அரிவாளை காட்டியதாகவும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இரவு 11.30 மணியளவில் போலீசாருக்கு தகவல் கொடுத்தேன். சம்பவ இடத்திற்கு போலீசார் 1/2 மணி நேரத்தில் வந்துவிட்டார்கள். நள்ளிரவு 3 மணி வரை போலீசார்கள் என்னுடன் சம்பவ இடத்தில் தான் இருந்தார்கள். கடையில் 3 விற்பனையாளர், 2 உதவியாளர், ஒரு சூப்பர்வைசர் உள்ளார்கள். ஒவ்வொரு நாளும் விற்பனையான தொகைகளை கணக்குபார்ப்பது மேற்பார்வையாளர் வேலை என்றால் சரிதான். மேற்பார்வையாளர் விற்பனை நேரத்திற்கு முன்பாக அனுமதியுடன் வீட்டிற்கு செல்லலாம். சேல்ஸ்மேன் வேலை சரக்குகளை விற்பனை செய்வது என்றால் சரிதான். நான் பணத்தை எடுத்துக்கொண்டு செல்லலாம் என்று அனுமதியோ, உத்தரவோ தரவில்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை

என்னை வழிமறித்த 4 நபர்களையும் திருச்சி மத்திய சிறையில் வைத்து அடையாளம் காட்டினேன். போலீசார் என்னை அழைத்துச்சென்றார்கள்.

1 முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எதிரிகளை அடையாளம் காட்டுவதற்கு முன்பு காவல்நிலையத்தில் வைத்து பார்த்தேன் என்றால் இல்லை.

6 வது எதிரி தரப்பில் கு.வி.

எதிரிகளையும் பணத்தையும் பிடித்துவிட்டதாக போலீசார் சொன்னதன்பேரில் காவல்நிலையம் சென்றேன் என்றால் சரிதான். அங்கு சென்று போலீசார் சொன்ன பிறகு தான் 4 நபர்கள் தெரியவந்தது என்றால் சரிதான். அன்று போலீசார் சொன்னதன் அடிப்படையில் தான் மத்திய சிறையில் அடையாளம் காட்டினேன் என்றால் சரிதான்.

ஒம்/பெரியசாமி,

ஒம்/C.ஸ்ரீதர்,
உதவி அமர்வு நீதிபதி,
குளித்தலை.

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF : ASSISTANT SESSIONS JUDGE,
KULITHALAI

Calendar
Miscellaneous : Case No.S.C. 55/2019
Sessions

Deposition of Witness for : Prosecution அ.சா. 2
Defense
Court

Name : மார்த்தாண்டன்
Father's Name : ம.வீரமலை
Village : நச்சலூர்
Taluk : குளித்தலை
Caste : இந்து (பள்ளன்)
Calling : டாஸ்மாக் விற்பனையாளர்
Religion : இந்து
Age : 44

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.03.2020

மு.வி.

நான் நெய்தலூர் காலனி டாஸ்மாக் கடையில் விற்பனையாளராக வேலை பார்க்கிறேன். அ.சா.1 எங்கள் கடையில் விற்பனையாளராக வேலை பார்க்கிறார். 11.11.2018 ம் தேதி விடுமுறையில் இருந்தபோது இரவு 11.15 மணியளவில் அ.சா.1 எனக்கு போன் செய்து அன்றைய விற்பனை தொகை ரூ.2,50,200/-யை கட்டபையில் எடுத்துச்சென்றபோது சரவணன் தோட்டம் அருகே போனபோது 2 இருசக்கர வாகனத்தில் வந்த 4 பேர் அரிவாளை காட்டி கண்ணில் மிளகாய்பொடியை தூவி பணம் இருந்த கட்டைபையையும், வண்டி சாவியையும் பிடுங்கிவிட்டதாகவும் கூறினார். பிறகு நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தேன். அங்கு யாரும் இல்லை. மறுநாள் காலை 09.30 மணிக்கு குளித்தலை காவல்நிலையத்திற்கு வந்து அ.சா.1 புகார் கொடுத்தார். நான் உடன் இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

7, 8 எதிரிகள் தரப்பில் கு.வி.

என் கடைக்கும், சம்பவ இடத்திற்கும் ஒரு கிமீ தூரம் இருக்கும். நான் சம்பவ இடத்திற்கு 11.30 மணிக்கு சென்றேன். 1/2 மணி நேரம் அங்கு இருந்தேன். சம்பவத்தன்று நான் வேலைக்கு செல்லவில்லை என்பதை போலீசாரிடம் சொல்லவில்லை என்றால் அன்றையதினம் நான் விடுமுறை அல்ல எனக்கு ஒருநாள் விட்டு ஒரு நாள் பணிநேரம். போலீசாரிடம் இந்த விவரத்தை சொல்லவில்லை. நான் சொல்வது போல் சம்பவ இடம் செல்லவில்லை என்றும் போலீசார் சொல்லிக்கொடுத்தன்பேரில் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

மற்ற எதிரிகள் இந்த குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கின்றனர்.

ஒம்/மார்த்தாண்டன்,

ஒம்/C.ஸ்ரீதர்,
உதவி அமர்வு நீதிபதி,
குளித்தலை.

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | : ASSISTANT SESSIONS JUDGE, KULITHALAI |
| Calendar | |
| Miscellaneous | : Case No.S.C. 55/2019 |
| Sessions | |
| Deposition of Witness for | : Prosecution அ.சா. 3 |
| | Defense |
| | Court |
| Name | : பாரதமணி |
| Father's Name | : கிருஷ்ணன் |
| Village | : மேட்டுமருதூர் |
| Taluk | : கரூர் |
| Caste | : S.C. |
| Calling | : டாஸ்மாக் |
| Religion | : இந்து |
| Age | : 57 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.03.2020

மு.வி.

நான் மேட்டுமருதூரில் வசித்து நெய்தலூர்காலணி டாஸ்மாக் கடையில் உதவி சேல்ஸ்மேனாக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1, 2 நான் பணிசெய்யும் கடையில் பணிபுரிகிறார்கள். 11.11.2018ம் தேதி இரவு அ.சா.1 பணிமுடித்துவிட்டு கடையில் விற்பனை தொகை ரூ.2,05,200/-யை எடுத்துக்கொண்டு வீட்டிற்கு சென்றபோது 5, 6 நபர்கள் வழிமறித்து கத்தியை காட்டி மிளகாய்பொடியை தூவி வழிபறி செய்ததாக சொன்னார்கள். அசா.1 எனக்கு போன் செய்து தகவல் சொன்னார். உடனே சம்பவ இடம் சென்று பார்த்தோம். அங்கு ஒருவரும் இல்லை. அன்று இரவே காவல்துறைக்கு போனில் தகவல் சொன்னோம். போலீசார் காலையில் விசாரித்தார்கள்.

7, 8 எதிரிகள் தரப்பில் கு.வி.

அ.சா.1 தகவல் கொடுக்கும்போது நாங்கள் கடையிலிருந்து கிளம்பி சென்றோம். அன்று இரவு 1, 2

மணி வரை இருந்தோம் அங்கு போலீசார் வந்தார்கள் என்றால் சரிதான். நான், போலீசார், பெரியசாமி 2, 3 மணி நேரம் இருந்தோம் என்றால் சரிதான். பெரியசாமி தகவல் சொன்னவுடன் நானும், அ.சா.2ம் கடையிலிருந்து சென்றோம் என்றால் சரிதான்.

மற்ற எதிரிகள் இந்த குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கின்றனர்.

ஒம்/பாரதிமணி,

ஒம்/C.ஸ்ரீதர்,
உதவி அமர்வு நீதிபதி,
குளித்தலை.

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | : ASSISTANT SESSIONS JUDGE, KULITHALAI |
| Calendar<br>Miscellaneous<br>Sessions | : Case No.S.C.55/2019 |
| Deposition of Witness for | : Prosecution அ.சா.4<br>Defense<br>Court |
| Name | : கண்ணன் |
| Father's Name | : ரெங்கசாமி |
| Village | : காந்திகிராமம் |
| Taluk | : கரூர் |
| Caste | : ரெட்டி B.C. |
| Calling | : மேற்பார்வையாளர் |
| Religion | : இந்து |
| Age | :52 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.03.2020

மு.வி.

நான் காந்தி கிராமத்தில் வசிக்கிறேன். நான் நெய்தலூர் காலணி டாஸ்மாக் கடையில் சூப்பர்வைசராக வேலை பார்க்கிறேன். அ.சா.1 முதல் 3 வரை உள்ளவர்கள் எங்கள் கடையில் பணிபுரிபவர்கள். 11.11.2018ம் தேதி இரவு 9 மணிக்கு கிளம்பி வீட்டிற்கு போய்விட்டேன். இரவு 11 மணிக்கு பெரியசாமி விற்பனை தொகை ரூ.2,50,200/-யை வீட்டிற்கு போகும்போது காளியம்மன்கோவில் அருகில் 2, 3 பேர்கள் வந்து மிளகாய்பொடியை தூவி பணத்தை எடுத்துச்சென்றுவிட்டார்கள் என்று கூறினார். நான் பக்கத்துகடை சூப்பர்வைசருக்கு போன் சொல்லி தகவல் சொன்னேன். காலை 9 மணிக்கு பெரியசாமியுடன் சென்று புகார் கொடுத்தோம். இதுசம்மந்தமாக போலீசார் விசாரித்தனர்.

7, 8 எதிரிகள் தரப்பில் கு.வி.

போலீசார் விசாரணை செய்தபோது நான் 9 மணிக்கு போய்விட்டதாக சொல்லிவிட்டேன். நான் காலை 5 மணிக்கு தான் சம்பவ இடத்திற்கு வந்தேன். அப்பொழுது போலீசார் எல்லாம் அங்கு இருந்தார்கள். அப்பொழுது அ.சா.1 பெரியசாமியும் அங்கு தான் இருந்தார். பணத்தை கேஸ்பாக்ஸ்ல் மட்டும் தான் வைத்துச்செல்லவேண்டும் கொண்டு செல்வதற்கு யாருக்கும் அதிகாரம் கிடையாது என்றால் சரிதான். நான் அ.சா.1 யை பணத்தை எடுத்துச்செல்ல அனுமதி வழங்கவில்லை. நான், 9 மணிக்கு கடையிலிருந்து செல்லும்போது அ.சா.1 முதல் 3 வரை கடையில் தான் இருந்தார்கள் என்றால் சரிதான்.

1 முதல் 5 எதிரிகள் தரப்பில் கு.வி.

அலுவலகம் நேரம் முன்பாக செல்வதற்கு மூமண்ட் ரிஜிஸ்டரில் கையொப்பம் இடவில்லை.

ஒம்/கண்ணன்,

ஒம்/C.ஸ்ரீதர்,
உதவி அமர்வு நீதிபதி,
குளித்தலை.